# 9 காரைக்காலம்மையார்

பெரிய புராணம் போற்றும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் மகளிர் மூவர் ஆவர். அவர்கள் காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார் ஆகியோராவார். அவர்களில் சைவசமயம், பக்தி இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு முன்னோடியாக விளங்கியவர் காரைக்காலம்மையார் ஆவார்.

இவர் இந்தியாவின் சோழ நாட்டில் உள்ள காரைக்கால் என்னும் நகரில் வாழ்ந்த வணிகர் குலத்தவரான ''தனதத்தன்'' என்பவருக்கு மகளாகப் பிறந்தார். பெற்றோர் இவருக்குப் புனிதவதியார் என்று பெயரிட்டு, சீருடன் வளர்த்து வந்தனர். புனிதவதியாரின் இளமைப்பருவம் இறையுணர்வு பொலிந்து விளங்கியது. மழலைப் பருவத்திலேயே சிவனின் திருவடிக்கு ஆட்பட்டு எல்லையற்ற பேரன்பு ததும்பும் சொற்களைப் பேசத் தொடங்கினார். இவ்வாறு அம்மையார் பிள்ளைப் பருவத்திலேயே சிவபக்தியுடன் விளக்கியமைக்கு அவரது பாடலே அகச் சான்றாய் அமைகின்றது.

**''பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்**
**சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்''**

என்று தாம் பாடிய அற்புதத் திருவந்தாதியில் கூறியுள்ளார். அழகின் கொழுந்து வளர்வது போல் வளர்ந்து வந்த புனிதவதியாரின் இறையன்பும் உடன் வளர்ந்து வந்தது. சிறுமியருடன் விளையாடும் போது கூட அரனைப் பற்றிப் பேசுவதுடன் சிவனடியார் தொண்டிலும் புனிதவதியார் சிறந்து விளங்கினார். பேரழகுடன் வளர்ந்து வந்த புனிதவதியார் மணப்பருவத்தை எய்தினார். இந்நிலையில் நாகப்பட்டணத்தில் இருந்த நிதிபதி என்னும் பெருங்குடி வணிகன் மகன் பரமதத்தனுக்கு புனிதவதியாரை மணம் முடித்து வைத்தனர். திருமணமான பின் மகளிர் கணவர் ஊர் சென்று இல்லறம் நடத்தலே மரபு. ஆனால் தனதத்தனுக்குப் புனிதவதியார் ஒரே மகளாக இருந்ததால் காரைக்காலிலேயே மகளையும், மருமகனையும் இல்லறம் நடாத்தப் பெருஞ்செல்வத்தைத் தந்தான். பரமதத்தனும் தன் குடிமரபிற்கேற்ப வணிகத்தில் ஈடுபட்டுச் செல்வம் பெருக்கும் முயற்சியில் ஈடுபட்டான்.

இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்த புனிதவதியாரும் சிவபெருமானின் திருவடியிடத்து நீங்காத அன்புடையவராய் சிவனடியார்களை உபசரித்தும் இல்லறப் பண்பு பிறழாமலும் வாழ்ந்து வந்தார். இந்நிலையில் ஒரு நாள் பரமதத்தனிடம் வந்த சிலர் அவனிடம் இரு மாங்கனிகளை வழங்கினர். அவனும் அக்கனிகளை ஏவலரிடம் கொடுத்து தன் இல்லத்திற்கு அனுப்பி வைத்தான்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

அவ்வேளை சிவனடியார் ஒருவர் மிக்க பசியுடன் புனிதவதியாரின் திருமனைக்கு வந்திருந்தார். அத்தொண்டரின் நிலையறிந்த புனிதவதியார் அவரை உபசரித்து உணவு படைத்தார். அப்போது கறி சமைக்கப்படாதிருந்ததால் கணவன் பரமதத்தன் அனுப்பி வைத்திருந்த இரு மாங்கனிகளில் ஒன்றைக் கறியமுதாகப் படைத்து மகிழ்ச்சியோடு அடியாரை அமுது செய்வித்தார். அதன்பின் பரமதத்தன் தன் வீட்டுக்கு உணவு உட்கொள்ள வந்தான். புனிதவதியாரும் கணவனுக்கு உணவு படைத்து சிவனடியார் உண்டது போக எஞ்சியிருந்த மாங்கனியை அளித்தார். அது மிகவும் சுவையாய் இருந்ததால் அடுத்த மாங்கனியையும் உண்பதற்கு விரும்பி ‘‘மற்றொரு மாங்கனியையும் இடுக’’ என்று பரமதத்தன் கூறினான். அம்மையார் என்ன செய்வது என்று தெரியாது மனங்கலங்கி இறைவனை வேண்டினார். இந்நிலையில் இறைவன் அருளால் கனி ஒன்று அவர் கையில் வந்து சேர்ந்தது. அதனை மகிழ்வோடு கொண்டு வந்து கணவனிடம் கொடுத்தார். அதை உண்ட பரமதத்தன் இது முந்தைய கனியை விட மிகவும் சுவையுடையதாய் உள்ளது உனக்கு இது ஏது? என்று வினாவினான். இதனால் கலக்கம் கொண்ட புனிதவதியார் உண்மையைக் கணவனிடம் மறைத்தலாகாது என்பதால், நடந்தவைகளைக் கூறினார்.

அதை கேட்ட பரமதத்தன் அப்படியாயின், இன்னொரு மாங்கனியை இறைவனிடம் பெற்றுத் தரும்படி கூற, புனிதவதியாரும் இறைவனை வேண்டி மாங்கனி பெற்றுக் கணவனிடம் கொடுத்தார். அக்கனியை பரமதத்தன் பெற்றவுடன் அது மறைந்து விட்டது. அதனால் வியப்படைந்த கணவன் ‘‘இவள் பெண் அல்லாள்; தெய்வம் எனவே இவளை விட்டு நீங்கிட வேண்டும்’’ என முடிவு செய்து, தான் வேற்று நாட்டுக்கு வணிகம் செய்யப் போவதாகக் கூறி, பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பட்டினத்தை அடைந்தான். அங்கு வேறொரு வணிகக் குலப் பெண்ணை மணந்து வாழ்ந்தான். அவனுக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. தன் முதல் மனைவியைத் தெய்வமாக நினைத்தவன் ஆதலால் அப்பிள்ளைக்கு புனிதவதி என்ற பெயரைச் சூட்டினான்.

பரமதத்தன் வேறொரு பெண்ணுடன் வாழ்க்கை நடத்துவதை அறிந்த புனிதவதியாரின் சுற்றத்தார் பரமதத்தனிடம் புனிதவதியாரை அழைத்துச் சென்றனர். புனிதவதியாரின் வருகையை அறிந்த பரமதத்தனும் தன் மனைவியோடும், குழந்தையோடும் எதிர் சென்று புனிதவதியாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, ‘‘நான் உம் அருளால் வாழ்கிறேன். இச்சிறு குழந்தைக்கும் உங்கள் பெயரையே சூட்டியுள்ளேன்’’ என்றான். கணவன் தன்னடியை வணங்கியதால் புனிதவதியார் கலக்கம் கொண்டார். அவருடைய சுற்றத்தார் ‘‘உன் மனைவியை நீ ஏன் வணங்குகின்றாய்?’’ என வினவினர். அதற்கு பரமதத்தன்; இவர் மானிடரல்லர் தெய்வம். இதனை நானறிந்தே இவரை விட்டகன்றேன்; ஆதலால் இவரை நீங்களும் வணங்குங்கள்! என்றான். உறவினர் வியப்படைந்து ஒன்றும் கூறாது நின்றனர்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

கணவனின் நிலையை உணர்ந்த புனிதவதியார் சிவனைச் சிந்தித்து மனம் ஒன்றி கணவன் வேண்டாத இவ்வுடலை நீக்கி உன் திருவடிகளைப் போற்றும் பேய் வடிவம் அடியேனுக்கு வேண்டும் என வேண்டி தன் அழகை உதறி பேய் வடிவம் பெற்றார். சிவனின் அருளால் சிவஞானம் கைவரப் பெற்ற அம்மையார் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் என்ற மூன்று நூல்களை இயற்றினார். பின்னர் தம்முள் ஞானவுணர்வு பொங்கக் கயிலாயத்துக்குச் சென்றார். 'அம்மலையில் காலால் நடக்கக் கூடாது' என எண்ணித் தலையினால் நடந்து சென்றார். அப்போது உமையம்மையார் 'தலையால் நடந்து வரும் எலும்பு உடம்பு பெற்ற இதன் அன்புதான் என்னே!' என்று இறைவி கேட்க இறைவன்,

**''வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே! மற்றிப்**
**பெருமைசேர் வடிவம் வேண்டிப் பெற்றனள்''**

என்றுரைத்தார். பின் தம்மை நாடிவரும் அந்த அம்மையாரை நோக்கி, 'அம்மையே' என்று அழைக்க அம்மையாரும் 'அப்பா' என்று அழைத்தார். இறைவனின் திருவடியில் விழுந்து வணங்கியதும் நம்மிடத்து ஈண்டு வேண்டுவதென்ன? என்று இறைவன் கேட்க அதற்கு அவர், இறைவனிடத்தில் இறவாத இன்ப அன்பு வேண்டுமென்று வேண்டிக் கொண்டார். இவ்வாறு அம்மையார் வேண்டியவாறே அருளிச்செய்த இறைவன், ''திருவாலங்காட்டில் நாம் ஆடும் திருநடனத்தைக் கண்டு மகிழ்ச்சி கொண்டு எப்போதும் நம்மைப் பாடுவாய்'' என்று அம்மைக்கு அருள்செய்தார். இறைவன் பணித்த வண்ணமே திருவாலங்காட்டைச் சென்றடைந்து, இறைவனின் திருநடனத்தைக் கண்டு 'கொங்கை திரங்கி' என்ற மூத்த திருப்பதிகத்தையும் பாடினார். அம்மையார் பாடிய பாடல்கள் பதினோராம் திருமுறையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அம்மையார் தமது வாழ்வின் பல்வேறு பருவங்களிலும் இறைவன் மீது இடையறாத அன்பைக் கொண்டிருந்தார். அதனால் இறைவன் திருவடி நிழலிலிருந்து பேரானந்தத்தை அனுபவிக்கும் பேற்றைப் பெற்றார். அவர் காரைக்கால் எனும் ஊரில் அவதரித்தமையாலும், இறைவனால் ''அம்மையே'' என்று அழைக்கப்பட்ட காரணத்தினாலும் ''காரைக்காலம்மையார்'' என்ற பெயரைப் பெற்றார். அம்மையாரின் குருபூசை பங்குனிச் சுவாதியில் கொண்டாடப்படும். அத்தினத்தில் நாமும் அம்மையாரின் இறைவழிபாட்டின் சிறப்புக்களை அறிந்து பயன் பெறுவோம்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## பாடச்சுருக்கம்

- புனிதவதியார் காரைக்காலில் பிறந்து வளர்ந்ததால் ‘‘காரைக்கால் அம்மையார்’’ என அழைக்கப்பெற்றார்.
- சிவனடியாரை வழிபட்டுச் சிவனடி சேர்ந்தவர்களுள் காரைக்கால் அம்மையாரும் ஒருவர் ஆவார்.
- காரைக்காலம்மையாரின் பாடல்கள் 11 ஆம் திருமுறையில் அடங்கியுள்ளன.
- இவரின் குருபூசைத்தினம் பங்குனிச் சுவாதியாகும்.

## பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்**

1. காரைகாலம்மையாரின் இயற்பெயரைக் குறிப்பிடுக.
2. பெரியபுராணம் போற்றும் பெண்ணடியார்கள் மூவரின் பெயர்களைத் தருக?
3. காரைக்காலம்மையார் பாடிய நூல்கள் எவை? எத்தனையாம் திருமுறையில் அவை சேர்க்கப்பட்டுள்ளன.
4. இப்பாடத்தை படிக்கும் போது உமது மனதில் தோன்றும் எண்ணங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

## ௐ செயற்பாடு

‘‘காரைக்காலம்மையாரின் இறைபக்தி’’ என்ற தலைப்பில் வகுப்பறையில் சொற்பொழிவொன்றை நிகழ்த்துங்கள்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக